# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.148/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அழகர்சாமி | த-பெ | ரெங்கராஜ் |
| ஊர்: | : | ஸ்ரீராம் நகர் | | |
| வயது: | : | 65/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓய்வு பெற்ற ஆசிரியர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.01.2026

**3 மற்றும் 4 ம் எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1) நான் தற்சமயம் ஸ்ரீராம் நகரில் வசித்து வருகிறேன். ஆசிரியராக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். கடந்த 03.05.2013 அன்று எங்கள் தெருவில் வசித்து வந்த அசா1 ன் செயினை நபர்கள் அறுத்து சென்றதாக கேள்விப்பட்டேன். அது சம்பந்தமாக போலீசார் சம்பவ இடமான ஔவையார் தெருவில் வந்து மதியம் 2.00-2.15 மணியளவில் வந்து விசாரணை செய்து வரைபடம் தயார் செய்தார்கள். போலீசார் கையொப்பம் கேட்டார்கள் நான் அதில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

**பார்வை மகஜர் அசாஆ 2.**

குறுக்கு விசாரணை

1) சம்பவம் நடந்த 03.05.2013 அன்று சுமார் 10.00 மணியளவில் பள்ளத்தூர் போலீசார் என்னை விசாரணை செய்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். என்னிடம் கையொப்பம் பெற்ற ஆவணத்தில் என்ன விபரம் எழுதப்பட்டிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. அசா1

எனது குடும்ப நண்பர் என்றால் சரிதான். எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் மட்டும் தான் செய்தேன். மேற்படி கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரியல்ல சம்பவ இடத்தில் வைத்து செய்தேன். அசா1 எனது குடும்ப நண்பர் என்தால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.05 17:36:54 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.